யூத்து சிமெண்ட் கம்பெனி எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள், அவர்கள் அப்படி எடுத்துச் செல்லாமல் தடை செய்து வள்ளியூரிலேயே சிமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

பேரூர் சர்க்கரை ஆலைத் திட்டம்

*வினா எண். 451—திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேரூர் சர்க்கரை ஆலைத் திட்டம் நிறைவேற்ற அரசு ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) இல்லை என்றால், பொது மக்களிடம் வாங்கிய பங்குத் தொகையை திருப்பிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியீடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்

வினாக்களுக்கு விடையளிப்பதில் ஏற்படும் காலதாமதம்

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்து போடப்பட்ட கேள்விகளுக்கு பதில்களை 15 நாட்களுக்குள் அளிக்க வேண்டும் என்று சொன்னீர்கள், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னாலே, கேட்ட கேள்விகளுக்கு இன்றைக்கு

வரை விடைகள் வரவில்லை, உடனடியாகக் கொடுத்த கேள்விகள் சிலவற்றிற்கு பதில் வருகிறது, முன்னாலே கொடுத்த கேள்விகளுக்கு பதில் வரவில்லை. உடனடியாக 15 நாட்களுக்குள் விடை அளிக்கப்படக்கூடிய நிலைமையில் தாங்கள் செய்த அறிவிப்பை சரியாக அமல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : ஏகாதிபத்திய வெள்ளைக்காரனை எதிர்த்து வீரமரணம் அடைந்தவர்கள் தூக்குக் கயிறு ஏறியவர்கள். .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய பேர்கள் தூக்குக் கயிறு ஏறியிருக்கிறார்கள். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அமருங்கள்,

திரு அழகர்சாமி அவர்கள் எழுப்பியதற்கு நான் பதில் சொல்லி விடுகிறேன். விடைகள் வருவதிலே காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அவர்களுக்கு 42 நாட்கள் நாம் கொடுத்திருக்கிறோம். அதற்குள் விடை வந்தாலும் நாம் உடனடியாக சேர்த்துக் கொள்கிறோம். எதையும் நிறுத்தி வைப்பதில்லை. விடைகள் வரவர அனுமதித்துக்கொண்டு தான் இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : விடைகள் வர வர என்றால் வருவதற்கு தாமதம் ஆகலாம், ஆண்டுக்கணக்காக வராமலே போய்விடலாம். ஆகவே கட்டாயமாக தாங்கள் சொன்னமாதிரி விடைகள் வர வேண்டும். வரவில்லையென்றால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42 நாட்கள் நாம் கொடுத்திருக்கிறோம். அதற்குள் வரவில்லை யென்றால் நாம் கேள்வியை போட்டு விடுகிறோம், அமைச்சர் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார், ஆகவே பதில் சொல்லியாக வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : ரூல்ஸிலே 42 நாட்கள் என்று இருக்கிறது. தாங்கள் அவைத் தலைவராக வந்தவுடனே ஒருநாள் ஒரு ரூலிங், டெசிஷன் கொடுத்தீர்கள். 15 நாட்களுக்குள் பதில் வரவேண்டுமென்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவை தலைவர் : மேக்ஸிமம் டைம் 42 நாட்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் 15 நாட்களுக்குள் கொடுக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அநேகமாக பல இலாக்காக்களிலிருந்து பதில்கள் வந்துகொண்டிருக்கின்றன.

இன்றைய தினம், 23 வினாக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான விடைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் ஒன்றரை மணி ஆகியிருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே சாதாரண கேள்விகளுக்குக் காலதாமதம் ஆவதைப்பற்றிக் கேட்டார்கள். ஆனால் ஒரு குறுகிய கால வினா ஒன்பது மாதங்களுக்கு முன்பு கேட்கப்பட்டது; அமைச்சர்களுடைய பயணப்படி குறித்து கேட்கப்பட்டது. நிதியமைச்சர் அவர்கள் கையெழுத்துப்போட்டு, ஒப்புதல் அளித்து உங்களுக்கு காப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினாவைப் பொறுத்து அமைச்சர் ஏற்றுக் கொண்டு பதில் கொடுக்க வேண்டும்.

திரு. து. புருஷோத்தமன் : பல இலட்சம் ரூபாய்களை அமைச்சர்கள் பயணப்படியாகப் பெற்றிருக்கிறார்கள். அதற்குப் பதிலே இல்லை என்றால் என்ன அர்த்தம்? அதற்குப் பதில் கொடுக்க மறுத்தால் என்ன ஆவது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுக்கவில்லை; இருக்கின்ற பிரச்னையைச் சொல்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பல இலட்சக் கணக்கான ரூபாய்களைப் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களைக் கேள்வி கேட்க இப்பொழுது அனுமதிக்கவில்லை. அவ்வாறு கேட்பதும் முறை அல்ல. வராத கேள்வியைப் பற்றி இங்கே கேட்டால் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டியதாக இருக்கும். எனவே அப்படிக் கேள்வி கேட்பது முறையல்ல.

திரு. து. புருஷோத்தமன் : அவையிலேயும் கேட்டேன். தங்கள் அறையிலேயும் கேட்டேன்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, குறுகிய கால வினா என்று அமைச்சரிடத்தில் கையெழுத்துப் பெற்று நாங்கள் தருகிறோம். அப்படிக் கொடுத்தும்கூட இன்னும் பதில் வராமல் இருப்பதால்தான் நாங்கள் கேட்கிறோமே தவிர வேறல்ல.

[1981 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கென்ன எல்லோருக்கும் சந்தேகம் வருகிறது (சிரிப்பு) அமைச்சரிடத்திலே நேராக உறுப்பினர்கள் வைத்துக் கொள்வதாக இருந்தால் நான் இங்கே இருக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. சு. பாலன்: குறுகிய கால வினாவிற்கு கையெழுத்து வாங்குகிறோம்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, குறுகிய கால வினாவிற்குக் குறைந்த காலத்தில் விடையளிக்க அமைச்சர் தயாராக இருக்கிறாரா என்பதற்காகத்தான் அமைச்சரிடத்தில் அது காட்டப்பட்டுக் கொடுக்கப்படுகிறது. அமைச்சர் கையெழுத்துப் போட்டால் குறைந்த காலத்தில் விடையளிக்கத் தயார் என்று அதற்குப் பொருள். குறைந்த காலத்தில் முடியா விட்டாலும் 15 நாட்களுக்குள் குறுகிய கால வினா வருவதற்குத் தலைவரவர்கள் அரசுத் துறைக்கு, அமைச்சர்களுக்குச் சொல்லி 15 நாட்களுக்குள் விடையளிக்கும்படி தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, குறுகிய கால வினாக்களை ஆளுங்கட்சியினரும் தருகிறார்கள், எதிர்க்கட்சியினரும் தருகிறார்கள். இன்றைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கேள்வி வருகிறது என்றால், நாளைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்வி வரவேண்டும். ஆனால் அப்படியில்லாமல் ஆளுங்கட்சியினரின் குறுகிய கால வினாதான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இரண்டு பக்கங்களையும் சமமாகப் பாவிக்கிறேன்; தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

3. அரசினர் சட்டமுன்வடிவு.

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.